Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | கார்த்திகை 13 | (28-11-1992) | சனிக்கிழமை | ஓசை 284

## அடுத்த வருட முற்பகுதியில் பொதுத் தேர்தல்?

அடுத்த வருட முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தலும், பொதுத் தேர்தலும் நடை பெற இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைச் செயலகமான ''சிறி கோத்தா''வை மேற்கோள்காட்டி லங்காதீப பத்திரிகை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக முக்கிய அமைச்சர்கள் மற்றும் கட்சி அமைப்பாளர்கள் ஆகியோருக்கு ஐக்கிய தேசியக்கட்சி பொதுச் செயலாளர் சிறிசேனகுரே கையெழுத்திட்டு கடிதமொன்றை அனுப்பி இருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது. அக் கடிதத்தில் கிராமங்கள் தோறும் கட்சியின் கிளைகளை நிறுவுமாறும், கட்சியின் வேலைத் திட்டங்களை பன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தேசம் எழுச்சி கொண்ட மாவீரர் நாள்

# உணர்வு பூர்வமாக மக்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சியில் தமிழீழத் தேசமே எழுச்சி கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியது. நேற்று அதிகாலை பன்னிரண்டு மணி ஒருவினாடிக்கு நினைவொலி எழுப்பலுடன் ஆரம்பமான மாவீரர் வார இறுதி நாள் நிகழ்ச்சியிலிருந்து நேற்று இடம் பெற்ற விடுதலைப் புலிகளின் படைப்பிரிவுகளின் அணிவகுப்பு, பொதுக்கூட்டம் வரை பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ் மாவீரர் நாள் நிகழ்ச்சியில் உணர்வு பூர்வமாகப் பங்கு பற்றினர்.

மாவீரர் வார இறுதிநாள் நிகழ்ச்சிகள் நேற்று அதிகாலை பன்னிரண்டு மணி ஒரு விநாடியில் நினைவொலி எழுப்பலுடன் ஆரம்பமானது. இறுதி நாள் நிகழ்ச்சியின் அடுத்த நிகழ்வாக மாவீரர் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது வீடுகள் தோறும் இந்நினைவுச்சுடர் ஏற்றும் நிகழ்ச்சி சிறப்பாக இடம்பெற்றது.

இதேவேளை வடமாகாணத்தில் உள்ள மாவீரர்கள் துயிலும் இல்லங்களிலும் இம் மாவீரர்சுடர் ஏற்றும் நிகழ்ச்சி இடம்பெற்றது. நள்ளிரவு வேளையிலும் இந்நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். மாவீரர்கள் பற்றிய புதிய பாடலின் பின்னணியில் நடைபெற்ற இந்நினைவுச் சுடரேற்றும் நிகழ்ச்சி மிகவும் உணர்ச்சிகரமானநிலையில் இடம்பெற்றது

நேற்று மாலை 3-00 மணியளவில் யாழ். கந்தர்மடம் சந்தியில் இருந்து அணிநடை ஆரம்பமாகியது. விடுதலைப் புலிகளின் மூன்று வெவ்வேறு படையணிகள் அணிவகுத்துச் சென்றது அதனைத் தொடர்ந்து. தமிழீழக் காவல்துறையினரின் அணிநடை சென்றது. அனைத்து அணிநடைப் பிரிவுகளும் ''பாண்ட்'' வாத்திய இசையொலிகளை எழுப்பிய வண்ணம் திருநெல்வேலிச் சந்தியூடாக யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தை அடைந்தன இம் மைதானத்தில் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. அணிவகுப்பு மரியாதையை தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர்களை போற்றி வணங்கும் மாபெரும் தேசியத் திருவிழா

### -இளங்குமரன்

தமிழீழ மண்ணை மீட்க நடைபெற்றுவருகின்ற தமிழீழ விடுதலைப் போரிலே தம்மை ஒப்புக்கொடுத்து அருஞ் செயல்கள் பல புரிந்து வீரச்சாவை தழுவிக்கொண்ட 5000 க்கு மேற்பட்ட மாவீரர்களை நினைவு கூருகின்ற வகையிலே மாவீரர் நாள் கொண்டாடப் படுகிறது.

தமிழீழ மக்கள் பேரெழுச்சி யுடன் மாபெரும் தேசியத்திரு விழா நடத்துகொண்டிருக்கிறது.

இவர்களை நினைவு கூருவதற்கு ஒரு நாளை மாவீரர் நாளாக கடைப்பிடிக்க வேண்டும் என எமது தலைவர் அறிவித்தார், மாவீரர்களைப் போற்றி வணக்கம் செய்வதற்காக இயக்கத்தில் முதற்களப் பலியான லெப்டினன்ட் சங்கரது நினைவு நாளான நவம்பர் 27-ம் நாளை தெரிவு செய்தார் ... யுடன் செயற்பட்டமையால் மாவீரர் வாரமாக கொண்டாட தீர்மானிக்கப்பட்டது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## தமிழீழ தேசியப் போரில் அனைவரும் இணையுங்கள்

### -பாலகுமாரன்

''மாவீரர்களின் இதயத்தை உங்கள் இதயத்தால் அணு

ஷ்ழாவாக தமிழீழமெங்கும் சிரோடும் சிறட்போடும்எழுச்சி யோடும் இந்த மாவீரர் நாள்

செய்தார்.

மக்கள் இந்நாளை நினைவு கூருவதில் மிகுந்த எழுச்சி

## அரசுக்குரிய கட்டுமானம் எம் மண்ணில் உருவாகிறது

### - யோகி

''இந்த மண்ணிலே ஒரு அரசுக்குரிய கட்டுமானம் அமைக்கட்படுகிறது. எங்களுக்குத் தெரியாமல் இது கட்டப்படுகிறது. எம்மிடம் ஆட்சியில்லை. ஆனால் அதற்குரிய அத்திவாரங்களை நாம் தற்போது அமைக்கிறோம் மாவீரர் சிந்திய உதிரத்தால்தான் இந்த மண் எழுப்பிநிற்கிறது. இந்த மண் போராடும். எல்லாக்

குடும்பங்களும் இந்தப் போராட்டத்தை சந்திக்கும்'' என்று நேற்றைய தினம் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற மாவீரர் தின எழுச்சிக் கூட்டத்தில் உரையாற்றும்போது தமிழீழ விடுதலைப் புலிகள் கலைவிக்குழு

( 4 ஆம் பக்கம் பார்க்க )

குங்களை வெறுமனே கூட்டிக் கழிக்கவேண்டாம். தற்போது இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் வெகு விரைவில் நடைபெற இருக்கும் அரசியல் நடவடிக்

கைக்கு வித்தாக அமைய உள்ளது. இவற்றிலிருந்து வெறுமனே ஒதுங்காமல் இவைகளில் பங்காளிகளாக நீங்கள் மாறவேண்டும்'' என தமிழீழ

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மிகக்குறுகிய காலத்தில் மிகப்பெரிய வளர்ச்சி

### - நடேசன்

ஏனைய நாடுகளில் உள்ள விடுதலை இயக்கங்களின் போராட்டங்களுடன்ஒப்பிடும் போது எமது போராட்டம் மிகக் குறுகிய காலத்தில் மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. இதற்கு இதுவரை எமது விடுதலைக்காக வீரச்சாவைத்

தழுவிக்கொண்ட 5000 ற்கும் மேற்பட்ட மாவீரர்களினதும் தியாகம், வீரம், திறமை, அர்ப்பணிப்புகளே காரணம் இவ்வாறு மிழீழ காவல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களை தாக்க முனைந்த விமானங்கள் விடுதலைப் புலிகளால் விரட்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

எழுச்சி கொண்டு திரண்ட மக்கள் மீது குண்டுவீச முயன்ற சிறிலங்கா விமானப்படை விமானங்களை விடுதலைப்புலிகள் விரட்டியடித்தனர்.

நேற்று மாலை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடை பெற்ற மாவீரர்நாள் பொதுக்கூட்டத்தில் திரண்டிருந்த பொதுமக்கள் மீது சிறிலங்கா விமானப் படையினரின் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடாத்த முயற்சித்தன.

இம் மைதானத்திற்கு மேலாக வட்ட மிட்டுக்கொண்டிருந்த குண்டுவீச்சு விமானங்கள் மீதுதயார் நிலையிலிருந்த விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு படைப்பிரிவினர் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் கொண்டு பல முனைகளிலிருந்து தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலைத் தொடர்ந்து

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# வன்னியில்உணர்வு பூர்வமான மாவீரர் வார நிகழ்வுகள்

(நமது நிருபர்)

வன்னி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மாவீரர் வார நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன. வன்னி மாவட்டத்தின் கேந்திர இடங்கள், அரச கூட்டுத்தாபன, உள்ளூராட்சி அலுவலகங்களிலும், சன சமூகநிலையங்கள், பொதுநிறுவனங்களிலும், விடுதலைப்புலிகளின் அலுவலகங்கள், பாசறைகளிலும் தேசியக் கொடி ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வுகளில் போராளிகள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மதகுருமார், பொதுமக்கள் அனைவரும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி கனகபுரம், வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லங்களில் சத்தியப்பிரமாணம், கொடி வணக்கம், மற்றும் வீரவணக்கம் மலரஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

### பொதுக்கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும்

வவுனியா கோட்டத்தில் மாறா இலுப்பையிலும், கிளிநொச்சி கோட்டத்தில் பாண்டியன் குளம், மல்லாவி ஆகிய இடங்களிலும் பொதுக்கூட்டங்களும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### மாவீரர் துயிலும் இல்லத்தில் மலரஞ்சலி

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர்துயிலும்இல்லத்திலும் வவுனியா ஈச்சன்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் மலரஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. கிளிநொச்சி பகுதியில் வட்டக்கச்சி, திருமுறிகண்டி, பாரதிபுரம் மாணவர்களின் அணி நடையும் மலர் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்


[4ஆம் பக்கம் பார்க்க]


## கொழும்பில் இரண்டு தமிழர் கைது

[கொழும்பு]

''எக்ஸ்போ 92'' கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த பகுதியில் நடமாடிய தமிழர் ஒருவரும் அவரது மாமனாரும் கொழும்பு பொலிசாரால்

( 4 ஆம் பக்கம் பார்க்க )





மாவீரர் நாள் நினைவாக விடுதலைப் புலிகளின் படைப் பிரிவுகள் நேற்று மாலை நடத்திய அணி வகுப்பில் கடற்புலிகளின் அணி வகுப்பினை முதலாவது படத்திலும் விடுதலைப் புலிகளின் துணைத்தளபதி திரு. பால்ராஜ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதையும், அவருடன் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் நிற்பதை இரண்டாவது படத்திலும், இந்நிகழ்வுகளில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## நோட்டம்

பருத்தித்துறைப் பகுதியை இரண்டு சிறிலங்கா பொம்மர் விமானங்கள் நேற்று பிற்பகல்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## புலிகளின் தாக்குதலுக்கு பலி

மூதூர் தோப்பூர் பொலிஸ் நிலைய உதவிப் பொறுப்பதிகாரி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு பலியாகியதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி (சி/5399)

### மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5409)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம், றோ. க./கிறீஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna. (சி-5450)

### தேவை

நல்லநிலையிலுள்ளஓர் இரும்புப்பெட்டகம் தேவை கிழமை நாட்களில் 10.00தொடக்கம் 4.00 மணிவரை ரகுராமன் நகைமாளிகை53, கஸ்தூரியார் வீதிஎனும்விலாசத்தில்தொடர்புகொள்ளவும். (3224)

### பள்ளிஎழுந்தருளாயே

மில்க்வைற நீலசோப் துணிகளில்அழுக்கைஅகற்றி, பளிச்சிடும் வெண்மையைத் தருகின்றது. அண்ணா கோப்பி கடைகளிலும்கிடைக்கின்றது. "திருப்பள்ளி எழுச்சி திருஎம்பாவை" கொண்ட நூலின் பிரதியொன்றை 10 மில்க்வைற்நீல சோப்மேலுறைஅனுப்பி அன்பளிப்பாகப்பெறுங்கள். (சி/5471)

## பௌதிகவியல் விரிவுரை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த [உ/த] வகுப்புக்களில் பௌதிகவியல் கற்பித்தல் சம்பந்தமான விரிவுரையொன்றும் கலந்துரையாடல்ஒன்றையும்நடத்துவதற்கு யாழ்ப்பாண விஞ்ஞானசங்கத்தின் தூயவிஞ்ஞானப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விரிவுரை யாழ் பல்கலைக்கழக இரசாயனவியல் துறை விரிவுரை மண்டபத்தில் வரும் 30-ம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற உள்ளது.

யாழ்.டிறிபேக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கே. பாலச்சந்திரன் விரிவுரையாற்ற உள்ளார்

## அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஆசிரியர் கலாசாலை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சை அடுத்த மாதம் 18-ம் திகதி தொடக்கம் 23-ம் திகதி வரை பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியிலும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் நடைபெற உள்ளது.

இப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் இதுவரை பரீட்சைத் திணைக்களத்திற்கு வந்துசேரவில்லை எனவும், இவற்றை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கும்படி பரீட்சை ஆணையாளர் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளருக்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (பர)

## சுழிபுரம் பகுதியிலிருந்து 750 குடும்பம் வெளியேறின

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகளை தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை சுழிபுரம் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது மேற்கொண்ட அகோர எறிகணைத் தாக்குதலினால் சுமார் 750 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என யாழ். செயலகத்திற்குக் கிடைத்திருக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக் குடும்பங்கள் கட்டுப்புலம், குடாக்கனை, வறுத்தோலை, நீத்துவான், பறாளை, பச்சந்தை, இறாத்தலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ...

#### பட்டப்பயிலுனர் ஆசிரியர்

## நியமனம்பெறஉள்ளோருக்கு கொட்டகலையில் பயிற்சி

கல்வி உயர்கல்வி இராஜாங்கஅமைச்சின் செயலாளர் ஆர். ஐ.ரி அலஸ் அவர்களினால்புதிதாக பட்டதாரி பயிலுநர் ஆசிரியராக நியமனம்பெற உள்ளவர்களுக்கான கடிதங்கள் அவர்களது சொந்த விலாசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப் பயிலுனர் ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சி வகுப்புக்கள் 17.12.92-ந் திகதி தொடக்கம் 24.12.92-ம் திகதி வரை கொட்டகலை சிறிபாதக்கல்விக் கல்லூரியில் நடைபெறுமெனவும் இந்நாட்களில் தங்கி பயிற்சி பெறுவதற்கான ஆயத்தங்களுடன் வருமாறும் இந்நியமனக்கடிதங்களில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனக் கடிதத்தை வழங்கத் தேவையான தகைமைகள் உண்டா என்பதை பரிசோதிப்பதற்கு கல்விச் சேவைச் சபையின அலுவலர்களும் உரியமான அதிகாரிகளும் இப் பயிற்சி நிலையத்துக்கு நேரில் சமுகம் அளிப்பார்கள் எனவும் இதற்கு உதவியாக பட்டச் சான்றிதழ் பிறப்புச்சான்றிதழ், அடையாள அட்டை (தேசிய) கிராம சேவை அலுவலகரிடம் இருந்து பெற்று பிரதேச செயலாளரினால்ஒப்பமிடப்பட்ட குணச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளையும், புகைப்படப் பிரதிகளையும் கொண்டு வருமாறும் இந்நியமனக்கடிதத்தில் பணிக்கப்பட்டுள்ளது. [17]

## ஷெல்லுக்கு பயந்து ஓடியவர் கிணற்றில் வீழ்ந்து மரணம்

கடந்த திங்கட்கிழமை சிறிலங்கா இராணுவத்தினர் வலிகாமம் மேற்கு பகுதியில் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்த வேளையில் எறிகணைகள் வந்து வீழ்ந்த நேரத்தில் தொல்புரம் மத்தியைச் சேர்ந்த செல்வநாதர் ஏகாந்தமலர் (வயது 26) என்பவர் அச்சம் காரணமாக ஓடிச் செல்கையில் கிணற்றில் வீழ்ந்து நீரில்மூழ்கி மரணமானார்.

காலை எட்டு மணியளவில் கிணற்றில் வீழ்ந்ததாகவும் உடனடியாக அயலவர்கள் ஓடிவந்து கிணற்றிலிருந்து மீட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர் என்றும் வழியில் அவர் மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20)

## மீனவர் மீது கடற்படை தாக்கு எஞ்சின், வலைகள் பறிப்பு

(வடமராட்சி)

மூன்று படகுகளில் சென்று கடற்றொழிலில்ஈடுபட்டிருந்த ஒன்பது மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் வளைத்துப் பிடிக்கப்பட்டு பலமாகத் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களது விலைமதிப்பான மூன்று எஞ்ஜின்கள், வலைகள், எண்ணெய் பரல்கள் மற்றும் பொருள்களையும் கடற்படையினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

கடலில் சிறிலங்கா கடற்படையினர்ரோந்துவருவதைக் கண்ட சில மீனவர்கள் கடலில் குதித்தபோதிலும் கடற்படையினர் இவர்களை நோக்கிச் சுட்டவாறு வந்து இவர்களை வளைத்துப் பிடித்து நையப்புடைத்த பின்னர் விடுவித்துள்ளனர்.

தமது படகுகளால் மீனவர்களது படகுகளையும்சேதமாக்கித் துப்பாக்கியால் சுட்டும் சேதமாக்கியுள்ளனர்.

தோமஸ் மரியதுரை [வயது 18] தோ. அன்ரன் மேரிராஜன் [வயது 14], அன்ரன் சந்தனராஜா [வயது 24], எம். மரியநாயகம் [வயது 40], சகாயம் [வயது 20], ச றொபின்சன் [வயது 18], ச. பொன்... [வயது 15], ச. அருமைராசா [வயது 40] ஆகியோரே சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்குஉள்ளாகிமீண்டு வந்தவர்களாவர்

மேற்குறித்த மீனவர்களுக்கு கடற்படையினரின் இத்தாக்குதலினால் மூன்று இலட்சத்துக்குமேல் இழப்பு ஏற்பட்டிருப்பதாக மதிப்பீடு மூலம் தெரியவருகிறது [பேர]

## நவம்பர் மாத பென்சன்; வவுச்சர் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியக்காரர்களுக்கான டிசம்பர் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் யாவும் யாழ். செயலகத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன ஆனால் நவம்பர் மாதத்திற்கான பென்சன் வவுச்சர்கள் இன்னும் யாழ். செயலகம் வந்து சேரவில்லை என யாழ். செயலக வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

டிசம்பர் மாதத்திற்கான பென்சன் வவுச்சர்கள் யாழ். செயலகத்திற்கு நேரடியாக கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் நவம்பர் மாதத்திற்கான பென்சன் வவுச்சர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கொழும்பில் இருந்து கையளிக்கப்பட்டது. இருந்தும் அவ்வவுச்சர்கள் இன்னும் யாழ். செயலகத்திற்கு வந்து சேரவில்லை. இவ்வவுச்சர்கள் வந்து சேர்ந்தவுடன் சகல ஓய்வூதியக்காரர்களுக்கும் விநியோகிக்கப்படும். அதன் பின்னரே டிசம்பர் மாதத்திற்கான பென்சன் வவுச்சர்கள் விநியோகிக்கப்பட உள்ளன என யாழ். செயலக வட்டாரங்களில் இருந்து மேலும் அறிய முடிகின்றது. [பா]

## க. பொ. த. (சா/த) - 1992 நேர அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| 07-12-92 | 08.30 - 09.15 | தமிழ்மொழியும் இலக்கியமும் | I |
| | 09.45 - 11.45 | தமிழ்மொழியும் இலக்கியமும் | II |
| 08-12-92 | 08 30 - 09.30 | ஆங்கிலமொழி | I |
| | 09.45 - 11 45 | ஆங்கில மொழி | II |
| | 01.00 - 02.00 | [illegible] | I |

## ஊனமடைந்தோர்நிவாரணம் பெறாதோர் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

வன்செயல் சம்பவங்களினால் ஊனமடைந்து இதுவரைநிவாரணத்தைப்பெற்றுக்கொள்ளாத பின்வரும் பகுதி மக்கள் குறிப்பிடும் காலத்தில் வந்து தங்களுக்கான கொடுப்பனவுப் பத்திரங்களில் கையொப்பங்களை இட்டுக்கொள்ளுமாறு யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது.

தென்மராட்சி மக்கள் அடுத்த மாதம் 9ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலாளர் பணிமனையிலும், வடமராட்சி மக்கள் அடுத்த மாதம் 12ஆம் திகதி காலை9.00 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலாளர் பணிமனையிலும் விண்ணப்பப்படிவ பற்றுச் சீட்டு, தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம், குடும்பப் பதிவு அட்டை, இரண்டு ரூபா பெறுமதியான முத்திரை ஆகிய ஆவணங்களுடன்வந்து கையொப்பம் இடலாம் எனவும்,

ஏனைய பிரிவைச் சேர்ந்த ஊனமடைந்தவர்கள் கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியில் வேலை நாட்களில் சமுகமளித்து கொடுப்பனவுப் பத்திரங்களில் கையொப்பமிடலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது. [பா]

## தேடுகிறேன் மகளே!



மகளே! உன்னைக்காணாமல் நான்படும் துயரம் கொஞ்சமில்லை. ஊண் உறக்கமின்றி உன்னைத் தேடுகிறேன். உடன் வந்து என்னைச் சந்தித்து ஆறுதல்தா!

மகள் குமுதினியையும்,
பேர்த்தி பூவிதாவையும்
தேடி அலையும்
த. குழந்தைவடிவேல்

வாடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (3700)

## நினைவு கூருகின்றோம் ...

1992-11-28

தலினால் சுமார் 750 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள் தலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சன் [வயது 18]. ச. பொன்ராசா [வயது 37], ச. ராஜ்

| | | | |
|---|---|---|---|
| | 09.45 - 11 45 | ஆங்கில மொழி | I |
| | 01.00 - 02.00 | சைவசமயம் I இந்துசமயம் | I |
| | | கிறிஸ்தவம் I கிறிஸ்தவம் றோ.க | I |
| | 02,15 - 04,15 | சைவசமயம் II இந்துசமயம் | II |
| | | கிறிஸ்தவம் II கிறிஸ்தவம் றோ.க. | II |
| 10-12-92 | 08 30 - 11.30 | கணிதம் | II |
| | 01.00 - 02.00 | கணிதம் | I |
| 11-12-92 | 08.30 - 11.30 | விஞ்ஞானம் | II |
| | 01.30 - 02,30 | விஞ்ஞானம் | I |
| 12-12-92 | 08.30 - 11.30 | வரலாறும் சமூகக்கல்வியும் | II |
| | 01.00 - 02.00 | வரலாறும் சமூகக்கல்வியும் | I |
| 14-12-92 | 08.30 - 09 30 | வர்த்தகமும். நிதியமும் | II |
| | | மரவேலை I விவசாயம் | I |
| | | மனைபொருளியல் | I |
| | 09 30 - 11.30 | மரவேலைII விவசாயம் | II |
| | | மனைப்பொருளியல் | II |
| | 01 00 - 02 00 | வர்த்தகமும் நிதியமும் | I |
| 15-12-92 | 08.30 - 09.30 | சித்திரம் | I |
| | 10.00 - 12.00 | சித்திரம் | III |
| | 01.00 - 02.00 | சித்திரம் | II |


நாட்டுநிலை சீரில்லை......

பற்றரிகள் சீராக இயங்கவில்லை...... கவலை வேண்டாம்......

★ வாகனங்கள் வயறிங் வேலை

★ மோட்டார் வைன்டிங் வேலை

★ பற்றரி சார்ச்

★ எலெக்ரிக்கல் வேலைகள்

அனைத்தையும் தரமாக
செய்து செயல்படுத்தும் நம்பிக்கை
தருபவர்கள்

**V.K.S.**

இன்றே நீங்கள் நாடவேண்டிய இடம்:

# வி. கே. எஸ்.

## பற்றரி சார்ச் & எலெக்ரிக்கல் வேக்ஸ்

நெல்லியடி - கரவெட்டி

உரிமையாளர் : V. K. செல்வரத்தினம்

(சி-5460)


## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின்மடியில்
30 - 01 - 1966

தாயகமண்ணில்
27 - 11 - 1987



**லெப். அலன்**

[முருகேசு உருத்திரமூர்த்தி]
(செம்மலை, மணலாறு)

சின்னவயதினில் சிந்தனை பெற்றவன்
சுதந்திர காற்றதை சுவாசிக்க பறந்தவன்
சென்ற பாதையில் இடர்கள் கண்டவன்
இடர்கள் கண்டும் இதயம் கலங்கிலன்
சுமைகள் தாங்கியவன் கரையே சென்றவன்
உன் பாதையை தொடரும்

(3708) மக்கள் மணலாறு.

1986 ஆம் ஆண்டு திரியாய்ப் பகுதியில் எமது முகாமொன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் கருணா** (முத்துக்குமாரு யுகராஜா - சாம் பல்தீவு)

**ஜனகராஜ்** (சபாரத்தினம் செல்வசோதி - கோவில் தோட்டம், அல்வாய் வடக்கு - யாழ்)

**கரன்** (தர்மலிங்கம் பிரபாகரன் - பிரபாகரன் வீதி, 'செந்தூர் இல்லம்', கோப்பாய் தெற்கு- யாழ்.

1987 ஆம் ஆண்டு மட்டுவில் பகுதியில் இந்தியப் படையினருடன் ஏற்பட்ட சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**வின்சன்** (கெங்காதரன் மகிந்தன் - சரசாலை வடக்கு சாவகச்சேரி - யாழ். )

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைது செய்யப்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

(தென் தமிழீழத்தில் வீரச்சாவு எய்திய முதற்பெண் போராளியான)

**லெப். அனித்தா** (தம்பிராசா இந்திராதேவி - ஆரையம்பதி - மட்டக்களப்பு)

யாழ். நாவற்குழிப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான

**திருமதி மனோகரி பிரபாகரன்** (அருள்வீதி, நாவற்குழி-யாழ்.)

1990 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**வதனன்** [கார்த்திகேசு பலேந்திரன் - முருகமூர்த்தி கோயிலடி, காரைநகர் - யாழ்.]

**சிறி** (முத்தையா மகேந்திரராசா - புளியங்கூடல் சுருவில், வேலணை - யாழ்.)

1991 ஆம் ஆண்டு மட்டு. சத்துருக்கொண்டானில் சிறிலங்கா இராணுவத்தினர் சூட்டில் எமைப் பிரிந்த நாட்டுப்பற்றாளரான

**ரவி** [இ. உதயகுமார் - இருதயபுரம் - மட்டக்களப்பு]

யாழ். அரியாலை நாவலடி இடம்பெயர்ந்தோர் முகாமருகே சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட முகாமில் தங்கியிருந்தவரான காரைநகரைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/5493]

சிந்தனைக்கு

ஒவ்வொரு கல்லின் கீழும் ஒரு தேள் தூங்குகிறது
- லத்தீன் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 28-11-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


# அ. தி. மு. க - காங்கிரஸ் தேனிலவு முடிகிறது?

தமிழக ஆளும் கட்சியான செல்வி ஜெயலலிதா தலைமையிலான ஆளும் கட்சிக்கும், மத்தியில் ஆட்சியிலிருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் நிலவிய தேனிலவு முடிவடையும் நிலையை அடைந்துள்ளது போல் தெரிகின்றது. இதனை வலியுறுத்துமாப் போல் சென்னையிலும், டில்லியிலும் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் டில்லியில் இடம்பெற்ற தேசிய ஒருமைப்பாட்டுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அயோத்தியில் இராமர் கோயில் அமைப்பதற்கு ஆதரவாகத் தெரிவித்த கருத்தும், நரசிம்மராவ் அரசாங்கம் அறிமுகப்படுத்திய புதிய பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்து மாநிலங்கள் அவையிலிருந்து அ. தி. மு. க. உறுப்பினர் வெளிநடப்புச் செய்தமையும் இதனை வெளிப்படுத்துமாப்போல் உள்ளது.

ஜெயலலிதாவின் தமிழக அரசாங்கத்திற்கும் நரசிம்மராவின் மத்திய அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள இவ் விரிசலானது தனியாக மேலே குறிப்பிட்ட காரணங்களினால் மட்டும் திடீரென ஏற்பட்டது என்றுசொல்லிவிடமுடியாது. செல்வி ஜெயலலிதாவுடனான உறவை தமிழக காங்கிரஸின் ஒரு பகுதியினர் ஆரம்பம் முதலே எதிர்த்தே வந்தனர். இவ் எதிர்ப்பானது "வெள்ளையனே வெளியேறு" போராட்டத்தின் ஐம்பதாவது வருடக் கொண்டாட்டங்களின் போது தீவிரமாக்கப்பட்டது. இதற்கு மூப்பனார் தலைமை தாங்கினார்.

இதேவேளை மத்திய அரசாங்கம் குறிப்பாக நரசிம்மராவ் ஜெயலலிதாவுடனான உறவை முன்னாள் காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி போல் நெருக்கமாக கொண்டிருக்கவில்லை சற்று விலகியே இருந்தார்.

ஜெயலலிதாவின் தான்தோன்றித்தனமான போக்கு ஆரம்பம் முதலே மத்தியிலுள்ள நரசிம்மராவிற்குத் திருப்தியை ஏற்படுத்தவில்லை அதிலும் இவ்வருட மத்தியில் ஜெயலலிதா மதுரையில் நடத்திய வெற்றிமாநாடும் அதனை மத்தியிலுள்ள அர

# இனப்பிரச்சினையால் இலங்கை பொஸ்னியாவாக மாறக் கூடாது

**- தினேஸ் குணவர்த்தனா**

(கொழும்பு)

"வடக்கு-கிழக்கு இணைப்பு சம்பந்தமாக இலங்கையின் இரு பிரதான கட்சிகளுமே எத்தகைய ஒரு தீர்மானத்தையும் எடுக்காமலிருக்கின்றன. இதனால் இங்குள்ள மக்களும் எந்த முடிவுக்கும் வரமுடியாமல் தவிக்கின்றார்கள"

இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்த்தனா எம்.பி கடந்த திங்களன்று பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; இன்று பாரதூரமான இத்தேசிய பிரச்சினையில் தீர்வு நடவடிக்கைகள் எதுவுமே தெளிவாக இல்லை. பாரதூரமான இத்தேசியபிரச்சினைக்கு யதார்த்தமான தீர்வு ஒன்றைக்காண முற்பட வேண்டும்.

இப்பிரச்சினை காரணமாக இந்நாட்டை பொஸ்னியாவாக மாற்ற இடமளிக்கக் கூடாது எனவும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினையை வைத்து விளையாடியது போதும்

**- அநுருத்தரதவத்த**

(கொழும்பு)

கடந்த திங்களன்று பாராளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சி உறுப்பினர் தரப்பில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வின் முக்கியத்துவம் பற்றி பலமாகவே வலியுறுத்தப்பட்டது.

கொழும்பில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலை இனப்பிரச்சினைக்கான யுத்தத்தின் உக்கிரம் ஆகியவை சகல கட்சிகளையும் சிந்திக்க வைத்துள்ளதனையும் அவரவர் பாராளுமன்றில் ஆற்றிய உரைகளிலிருந்து உணர முடிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திர கட்சி எம்.பியான கேணல் அநுருத்தரத்வத்த பேசும் போது இனப்பிரச்சினையை வைத்துக்கொண்டு விளையாடியது போதும். தற்போதைய இனப்பிரச்சினைக்கு உடனடி அரசியல் தீர்வு அவசியம் எனத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; நாம் வரலாற்றின் மீது வாழ முடியாது தற்கால, எதிர்கால நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே வாழ வேண்டும் எனத் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினை தீர்வுக்கு வெளிஉதவி தேவையில்லை

**-பிரதமர் டி. பி.விஜேதுங்க**

(கொழும்பு)

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முன்முயற்சிநடவடிக்கைகளில் பாராளுமன்றத்தெரிவுக்குழு ஈடுபட்டதினால் வெளிநாடுகளின் மத்தியஸ்த உதவி இப்போதைக்கு இலங்கைக்கு அவசியமில்லை என பிரதமர் டி பி விஜேதுங்க கடந்ததிங்கட்கிழமை பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; 1990-ம் ஆண்டு அவுஸ்ரேலிய பிரதமர் இலங்கையின் இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்கதயாராயிருப்பதாக ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார். அப்போது சர்வகட்சி மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தினால்எமக்கு அவர்களின் உதவி தேவைப்படவில்லை.

தற்போதும்பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்துவருகின்றது. உள்நாட்டிலேயே முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதால் வெளியாரின் உதவிகள் தற்போது தேவைப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## சுருக்கெழுத்தாளர் போட்டிப் பரீட்சை

அரசாங்க சேவை, மாகாண அரசாங்க சேவை, அரசாங்க கூட்டுஸ்தாபன சேவைகளுக்கான சுருக்கெழுத்தாளர்களையும் தட்டெழுத்தாளர்களையும் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சை இன்றும் நாளையும் நடைபெறஉள்ளது

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பரீட்சார்த்திகள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தி யாழ். கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

## வங்கியை ஆரம்பிக்க ஜப்பான் தயக்கம்

ஜப்பானிய வங்கி ஒன்றைக் கொழும்பில் நிறுவுமாறு அரசு முன்வைத்த கோரிக்கையை ஏற்க ஜப்பான் தயங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையில் இப்போது நடைபெறும் 400 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தகம் ஒரு வங்கியை ஆரம்பிக்கப் போதாது என்று எக்ஸ்போ 92க்கு வந்த ஜப்பானிய வர்த்தகர் குழுவின் தலைவர் மங்சோ சுவாகி தெரிவித்தார்,

# நான்கு பெண்கள் கொழும்பு பொலிசால் கைது

[கொழும்பு]

கொழும்பில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் நான்கு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது,

கொழும்பின் வெவ்வேறு பகுதிகளில் வைத்து சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த தலா ஒவ்வொரு பெண்கள் கொழும்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த ஒருவருக்கு தகவல்களை வழங்கி வந்தனர் என பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை, புறக்கோட்டைப் பகுதியில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த தமிழ் பெண் ஒருவரும் கொழும்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் சிறிலங்கா கடற்படை தளபதி கிளான்சி பெர்னான்டோ மீது குண்டுத் தாக்குதலை நடாத்தியதாக கூறப்படும் லோகமோகனுடன் தொடர்புடையவர் என கூறப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சி கூட்டு முன்னணி புதிய போராட்டம்

(கொழும்பு)

எதிர்க் கட்சிகளின் கூட்டு முன்னணி எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஜனநாயகமரபுகளுக்கு அமைவாக அரசுக்கு எதிரான புதிய வடிவிலான எதிர்ப்பு திட்டமொன்றை அறிமுகப்படுத்த இருப்பதாக தெரியவருகிறது.

இந்த திட்டத்தில் நாட்டின் சகல பகுதிகளிலுமிருந்து மக்கள் கலந்து கொள்ளக் கூடிய விதத்தில் திட்டமிடப்படும் எனவும், எதிர்க்கட்சி கூட்டு முன்னணியின் கமிட்டித் தலைவர் மகிந்த ராஜபக்ஷா கூறியுள்ளார்.

மனித சங்கிலிப்போராட்டம், பாதயாத்திரை, ஒலியெழுப்பும் போராட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அமுல் செய்த போது அதன் மூலம் கணிசமான மக்கள் இந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டதாகவும் இந்தப் புதிய போராட்டத்தில் அவற்றை விடக் கூடிய அளவில் மக்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# பாராளுமன்ற கட்டடத்திற்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில்பாராளுமன்றக் கட்டடம் மிகுந்த எச்சரிக்கையுடன்பாதுகாக்கப்பட்டுள்ளது நேற்றுமுன்தினம் பலத்த பாதுகாப்பு ஒழுங்குகள் மத்தியில் பாராளுமன்றம் கூடியது.

பாராளுமன்றத்துக்குள் போகும் வழிகள் அனைத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதியிலும் பாதுகாப்பு நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது முக்கிய சந்திகளிலும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் குவிக்கப் பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகள் மேலும் பல தாக்குதல்களைக் கொழும்பில் நடத்தக் கூடும் என்று பொலிசார் மக்களை எச்சரித்துள்ளனர்.

# மூழ்கிய ரஷ்ய நீர் மூழ்கியில் கதிரியக்க ஒழுக்கு

(வாஷிங்டன்)

நோர்வேக்கு அப்பால் 1989ஆம் ஆண்டு கடலில் மூழ்கிய அணுசக்தி கொண்ட ரஷ்ய நீர்மூழ்கியில் கதிரியக்க ஒழுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கதிரியக்க ஒழுக்கினைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படாதுவிட்டால் புளுட்டோனியம் என்னும் நஞ்சு பரவி அதனால் ஆபத்து ஏற்படும் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புளுட்டோனியம்

## நாஸி ஆதரவாளர்களால் ஜேர்மனியில் மூவர் கொலை

பொருளாதாரக் கொள்கைமீது

# உடனடி விவாதம்வேண்டும் அ.இ.அ.தி.மு.க. வெளிநடப்பு

மாநிலங்கள் அவையில் நரசிம்மராவ் அரசின் பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்து முதல் தடவையாக அ.இ.அண்ணா திராவிடமுன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். பாரதீய ஜனதாக் கட்சியைத் தவிர ஏனைய கட்சிகளும் வெளிநடப்புச் செய்தன.

துறை இணைஅமைச்சர் எம். எம் ஜேக்கப் கடந்தபுதன் ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பின்னர் நேற்றுமுன்தினம் அ.இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் இந்த வெளிநடப்பைச் செய்தனர்.

மாநிலங்கள் அவையில் அ. இ. அண்ணா திராவிட முன்

சிற்கு எதிராகவும் நடத்திக் காட்டியமையும் நரசிம்மராவிற்கு சில மனத் தாங்கல்களை ஏற்படுத்தியே இருந்தன.

கடந்தமாதத்தில்கூட ஜெயலலிதாவுடன் கலந்து கொள்ளவிருந்த கூட்டம் ஒன்றை நரசிம்மராவ் ரத்துச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கு ஜெயலலிதா மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச் சாட்டே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால்தற்பொழுது தமிழக காங்கிரஸில்நேரடியாக ஜெயலலிதாவிற்கு ஆதரவுவழங்கிவந்த அதன் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும்ஜெயலலிதாவின் கொள்கையைக் கண்டனம் செய்துள்ளார் 'திராவிடப் பண்பாட்டின் பாதுகாவலர் எனக் கூறிக் கொள்ளும் தமிழக முதல்வர், பாரதிய ஜனதாக் கட்சியின் ஊதுகுழலாக மாறியுள்ளார்' எனத் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி காரசாரமாகக் கண்டித்துள்ளார்.

ஆனால் எதையும் ஆறுதலாகவும் தான் பழிகளைப் பொறுப்பேற்காமலும் அரசியல் சதுரங்கத்தை ஆடிச் செல்லும் நரசிம்மராவ் ஜெயலலிதா விவகாரத்தையும் ஆறுதலாகக் கையாள்வதாகவே தெரிகின்றது. இதற்கு ஜெயலலிதாவிற்கு எதிராக வளர்ந்துவரும் அரசியற் சூழ்நிலையும் வாய்ப்பாகவே உள்ளது, செல்வி ஜெயலலிதாவிற்கு எதிராக இன்று வைக்கப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுக்களையும், அது தொடர்பாக ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ள மகஜர்களையும் தமிழக முன்னாள் ஐ. ஏ. எஸ். அதிகாரி திருமதி சந்திரலேகா மீது அசிட் வீசப்பட்டது தொடர்பாக ஜெயலலிதாவிற்கு எதிராக எழுந்துள்ள குற்றச்சாட்டும் நரசிம்மராவிற்கு வாய்ப்பானவையே.

மேற் கூறப்பட்ட காரணங்களை நரசிம்மராவ் பயன்படுத்துவாரேயானால் அது தற்பொழுது தமிழகத்தில் ஜெயலலிதா அரசிற்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்களை வாரியிறைத்து வரும் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி நரசிம்மராவின் கையாளாகவே செயற்படுகின்றார் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு மறுக்கமுடியாத ஒன்றாகவே இருக்கும். இதேவேளை திராவிடக் கட்சிக்குத் தலைமை தாங்கிக் கொண்டு பிராமண ஆதிக்க அடிப்படை வாதிகளுக்கு ஆதரவு அளிக்கும் ஜெயலலிதாவிற்கு பொருத்தப்பாடான 'பரிசாகவே' இருக்கும்.

(பொன்)

ஜேர்மனியில் நாஸி ஆதரவாளர்களினால் ஒரு துருக்கியப் பெண்ணும், இரு இளம் பெண்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதையடுத்து இனவாத எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அங்கு நிகழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மொயலின் நகரில் துருக்கியர் வசித்த இரு கட்டடங்கள் மீது நாஸி ஆதரவாளர்கள் கைக்குண்டுகளை வீசியதினால் இம்மூவரும் கொல்லப்பட்டுள்ளனர், இதை ஆட்சேபித்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஜேர்மன் மக்கள் அமைதியான ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடாத்தினர்.

இவ் ஆண்டு ஜேர்மனியில் இடம்பெற்ற இனவாத அல்லது யூத எதிர்ப்புத் தாக்குதலில் இது மிக மோசமான தாக்குதல் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் ஜனநாயக ஒழுங்கு முறைக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்எனக்கூறி சமஷ்டி வழக்கு தொடுநர் காரியாலயம் வலதுசாரி இனவாத பலாத்காரம் குறித்து முதற் தடவையாக விசாரணை நடாத்த முன்வந்துள்ளது.

குறித்த அச்சம் பற்றி, ரஷ்ய விஞ்ஞானிகள்பெரிதும்கவலை கொண்டுள்ளனர். இப் புளுட்டோனியம் அதிக ஈர்ப்பு சக்தி கொண்டது.

1989ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நோர்வேக்கு அப்பால் கடலில் ''கொம்சோமொலெட்ஸ்'' என்ற நீர்மூழ்கி கப்பல் மூழ்கியதால் 42 பேர் உயிரிழந்திருந்தனர்.

சிஸியம் 137 என்ற ஒரு பொருள் இந்த நீர்மூழ்கியிலிருந்து வெளியேறுவதாக ரஷ்ய நிபுணர் குழுவொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

காங்கிரஸ்கட்சிக்கும், அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையில் அபிப்பிராயபேதம் ஏற்படாமல் தடுப்பதற்குச் செல்வி ஜெயலலிதாவுடன் மத்தியஉள்

ஜி. சுவாமிநாதன், இந்திய அரசு அதன் பொருளாதாரக் கொள்கையை உடனடியாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்றார்.

# ஐ.நா.பாதுகாப்புச்சபையை விஸ்தரிக்க முயற்சி

ஜப்பான், ஜேர்மன் உட்பட அணிசேரா நாடுகளில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையை விஸ்தரிப்பதற்கென பல புதிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ள சில நாடுகளின் நீண்டகால ஆதிக்கத்திற்கு முடிவு கட்டுமுகமாகவே இப்புதிய முயற்சிகளில் அந்நாடுகள் ஈடுபட்டுள்ளன.

ஐ நா. பாதுகாப்புச் சபையை விஸ்தரிப்பு செய்ய வேண்டும் என்று கூறுபவர்கள் அடுத்த செப்ரம்பர் மாதத்துக்குள் தமது கருத்துக்களைத் தெரியப்படுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமான நகல் தீர்மானமொன்றும் ஐ. நா. பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரம்பர் மாதம் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் 47 வது கூட்டத் தொடரின் போது இச்சபையைச் சீர்திருத்த வேண்டும் என பலர் கேட்டுக் கொண்டுள்ளதை அடுத்து இத்தீர்மானத்துக்கு பலர் ஆதரவு தெரிவித்த போதும் எவ்வாறு புனரமைப்புச் செய்வது என்பதில் எந்த நாடும் கருத்துடன்பாட்டிற்கு வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மியான்மாரில் மனித உரிமை மீறப்படுகிறது

- ஐ. நா. அறிக்கை

மியான்மாரில் மனிதஉரிமை மீறல் குறித்த நடவடிக்கைகள் பற்றி ஐ. நா. முதல்முதலாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

மியான்மாரில் இராணுவ அரசு பரவலான சித்திரவதைகளை மேற்கொள்வதாகவும், மனித உரிமை மீறல் குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாக அவ் அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மியான்மார் அரசு மனித உரிமை ஆய்வாளர்களுடன் ஒத்துழைத்து நிலைமையைச் சீர்செய்து விடுமென்ற நம்பிக்கையில் ஐ. நா வினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டன.

## பாதுகாப்பு தொடரும்

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விரும்புகின்ற வரையிலும் அவருக்கு தேசிய பாதுகாப்பு காவல் படையின் பாதுகாப்பு அளிக்கப்படுமென மத்திய அரசு உறுதியளித்தது என நேற்று மக்களவையில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் இதனைத் தெரிவித்தார்.

அயோத்தியா நிலைமை

## நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு உரிமை

அயோத்தியா நிலைமையை மதிப்பிட மத்திய அரசுக்கு உரிமை உண்டு என்றும், நீதிமன்ற உத்தரவுகளை மீறாமல் தடுக்க. தகுந்த அரசியல் சாசன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் ஆறாம் திகதி கரசேவை நடப்பதை தடுப்பது பற்றி நிச்சயமாக உறுதிமொழிகளை தரமறுத்து உத்தரப் பிரதேச அரசு தாக்கல் செய்த ரிட் மனு மீதான தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்தது.

உத்தரப்பிரதேச அரசு உத்தியான நிலையை எடுக்கறு தவறினால் அயோத்தியாப் பகுதிக்கான தனி அதிகாரி நியமிக்கப்படலாம்] என்றும், கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் கட்டுமாணப் பணி எதுவும் நடைபெறாமல் தடுக்கும் நீதிமன்ற ஆணைகளை செயலாக்குமாறு மாநில அரசு பணிக்கப்படலாமென்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

## அயோத்தியா விவகாரத்தில் ஒத்துழைக்கக் கோரிக்கை

ராமர்ஜென்மபூமி- பாபர் மசூதி விவகாரத்தை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு பிரதமர் பி. வி. நரசிம்மராவிற்கு முழு ஒத்துழைப்பையும் அளிக்குமாறு பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். ஜே அத்வானியை தமிழக முதல்வர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார்.

அயோத்தியா விவகாரத்தில் பாரதீய ஜனதாவின் நிலை நன்கு தெரிந்ததுதான் என்றாலும், சட்டத்தை மதித்து நடக்க வேண்டுமென்றும் அமைதியைப் பராமரிக்கும் நோக்கத்துடன் எல்லா சர்ச்சைகளையும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளுமாறும் அத்வானிக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜெயலலிதா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின் அடிப்படையில்தான் தீர்வு காணப்படமுடியு என்றும் அவர் அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## மன்னிப்புக் கோரியது

ஐ. நாவின் வெளியீடுஒன்றில் இந்தியாவின் ஒரு பகுதியாக ஜம்மு காஷ்மீர் பகுதியைக் காட்டாமல் விட்டதற்காக ஐ. நா. அலுவலகம் இந்தியாவிடம் மன்னிப்புக் கோரியுள்ளது.

வெளிவிவகார இணை அமைச்சர் எட்வார்டோ பெலய்ரோ பாராளுமன்றத்தில் எழுத்துமூலமாக அறிவித்த பதில் ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈழநாதம்

# கொழும்பில் 3000 பேர் கைது
## விபரமறியமுடியாது உறவினர் கவலை

(கொழும்பு)

இலங்கை கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோவின் கொலையினை அடுத்து கொழும்பில் கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை வடக்குக் கிழக்கு தமிழ் இளைஞர்கள் உட்பட மொத்தம் மூவாயிரம் பேரினைத் தாண்டிவிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களை விசாரணை செய்வதற்காக நால்வர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவில் கொழும்பு குற்றவியல் புலன் விசாரணை தலைமையலுவலக பொலிஸ் அதிகாரி எம். எச். குணரத்ன. நந்தன விஜேரட்னா பொலிஸ் விசாரணை அதிகாரி எச்.எம். திலாம்பிடிய, உதவி பொலிஸ் பரிசோதகர் விஜேவிக்கிரம ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

இதேவேளை மேற்படி கைது செய்யப்பட்ட இளைஞர்களின் விபரங்களை அறிய முடியாமல் பெற்றோர் மிகுந்த கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

## இனப்பிரச்சினைக்கு
# புதிய அணுகுமுறையில் தீர்வு; தவறின் நாட்டில் இரத்தக்களரி

**- எம் எச் எம் அஷ்ரப்**

(கொழும்பு)

''பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு பிரபாகரனை ஜனாதிபதி பிரேமதாசாவும், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் ஏன் கூட்டாக அழைப்பு விடுக்கக் கூடாது? இப்பிரச்சினைக்கு உகந்த முறையில் செயற்படாதுவிட்டால் இலங்கையில் தமிழ்ச் சமூகம் முழுவதனையும் ஒழிக்காமல் போரையோ, போராட்டத்தையோ நிறுத்தமுடியாத நிலை ஒன்று உருவாகும் இந் நிலையில் புதிய அணுகுமுறையுடன் சிந்தித்து செயற்படாதுவிட்டால் இந்நாட்டில் மேலும் இரத்தக்களரிதான் ஏற்படும்''

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், திகாமடுல்ல எம். பியுமான எம்.எச்.எம். அஷ்ரப் கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

இன்று நடைபெறும் குண்டு வெடிப்புக்களுக்கு வெறுமனே புலிகள்மட்டும் காரணமல்ல. நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும்பொருட்டு வேறுசக்திகளும் செயற்படலாம்.

இன்று புலிகள் முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் இருக்கலாம், சிங்களச் சமூகத்திற்குள்ளும் இருக்கலாம். இந்நிலையில் கூட்டு அணுகுமுறைமூலம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் புலிகளைமேசைக்கு அழைத்து உங்களுக்கு தேவையானதென்ன என வினாவி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புதியதொரு அணுகுமுறையைக் கடைப்பிடித்தாலென்ன என அஷ்ரப் கேள்வி எழுப்பினார்.

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மாங்குள முகாம் தகர்ப்பில் வீரச்சாவு கண்ட

**கப்டன் டோறா**

(கந்தப்பு - பத்மாவதி) (கரவெட்டி)

**வீரச்சாவு 22 - 12 - 1990**

இவள்,
சுதந்திரத்திற்காய் தன்
சுவாசத்தை நிறுத்திக்கொண்டவள்
விடுதலைக்காய்
தன்னுடலை
வித்தாக்கிக்கொண்டவள்
தமிழ் வாழ
தமிழ்மண் விடிவுபெற
தன்னுதிரத்தைக் கொட்டி
இந்த மண்ணை
உரமாக்கிக்கொண்டவள்
ஆதலால்
இவள் அழிந்தவளல்ல
மானுடப் பிறப்பின்
மகத்துவம் மிக்கவளாய்
வரலாற்று ஏட்டில்

---

## தொழிலாளர் சேவைக்கால பயிற்சி

யாழ். மாநகராட்சி மன்றத்தில் கடமையாற்றும் சக ஊழியர்கட்கும் சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக மாநகராட்சி மன்றத்தின் தொழிலாளர்களின் ஒரு பகுதியினருக்கு இன்று காலை 8.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் ஒரு நாள் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பயிற்சியின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பாட விதானத்தில் தொழிலாளர்களின் ஆளுமை, பொருளாதார மேம்பாடு அடைவது தொடர்பான உணர்வை தொழிலாளர்க்கு ஏற்படுத்தல் சமூகத்தில் தொழிலாளரின் பங்கு, தொழிலாளர்கள் தங்களுடைய பிள்ளைகளின் கல்வியை ஊக்கப்படுத்துவது எப்படி, தனிநபர் சுகாதாரமும் தொழில் சுகாதாரம் போன்ற விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

## பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

பட்டப் பின் படிப்பு டிப்புளோமாபரீட்சை மறுஅறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது என கொழும்புப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. இப் பரீட்சை நாளை நடைபெற இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## உருவப்படங்கள் திரை நீக்கம்

இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்க சனசமூக நிலையத்தில் அப்பகுதியைச் சேர்ந்த ஆறு கடற்புலிகளின் உருவப் படங்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

மாவீரர் நாளையொட்டி கடற்புலி லெப். வெங்கடேஸ், கடற்புலி நரேன், வீரவேங்கை ரவாஸ், கடற்புலி லெப். பெருமாள், இளம்புலி சாலீஸ், லெப். தில்லை மற்றும் தியாக தீபம் திலீபன், தியாகச்சுடர் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை ஆகியோரது உருவப் படங்கள் திரைநீக்கம்செய்து வைக்கப்பட்டன. (ரோ)

---

# இந்த ஆண்டு இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு

**- பிரேமதாசா**

(கொழும்பு)

இந்த ஆண்டு இறுதிக்குள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் வடக்கு, கிழக்கு மன்றத் தெரிவுக் குழுவிலிருந்து தீர்வுகளைப் பெறுவது சாத்தியமாகும் பட்சத்தில் அதற்குரிய கௌரவம் பங்கு

---

## தேசம்

தளபதி திரு. பால்ராஜ். யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. தமிழ்ச்செல்வன், விடுதலைப்புலிகளின் மகளிர் படைத் தளபதி செல்வி ஜெயந்தி, கல்விப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன், கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை, கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி ரதி, கடற் புலிகளின் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி நளாயினி, மட்டக்களப்பு தொடர்பகப் பொறுப்பாளர் திரு அருள். திருமலைத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. குலம், யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி ஆகியோர் ஏற்றுக்கொண்டனர். அணிவகுப்பு மரியாதையை மேற்படி மைதானத்தில் திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்தனர். இதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் பலர் உரை நிகழ்த்தினர்.

மேலும் நேற்றுப் பகல் முழுவதும் மாவீரர் நினைவுகூரும் முகமாக அமைக்கப்பட்டிருந்த நினைவுப் பந்தல்களிலும், வளைவுகளிலும் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த உருவப்படங்கள் உட்பட மாவீரர் நாள் அலங்காரங்களை ஆயிரக்கணக்கில் மக்கள் சென்று பார்வையிட்டவண்ண

---

## அரசுக்குரிய

பொறுப்பாளர் திரு. யோகரத்தினம் யோகி அவர்கள் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தமிழன் அந்நிய நாட்டில் வாழமுடியாத நிலை தற்போது தோன்றுவதை நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். இங்கு எங்கள் தாயகம் உண்டு. வளம் உண்டு நிச்சயம் விடுதலை பெறுவோம். தமிழன் அந்நிய நாட்டில் அடிமைப்படக் கூடாது. வெற்றிகளை சுமக்கும்போது சோகங்களும் இருக்கிறது என்பதை நீங்கள் புரியவேண்டும். சோகங்கள் இல்லாமல் துன்பங்கள் இல்லாமல் போராட்டம் வரவில்லை. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளை இழந்து வரலாறு படைத்துள்ளோம். தமிழர்கள் என்ற உணர்வோடு எழுந்து நிற்க எத்தகைய அந்நியப் படையையும் எதிர்ப்போம் என்பதை நினைவு கூருவோம் வரலாற்றை வெல்வோம். தமிழர் தாயகத்தை அமைப்போம் என்றார். (17)

---

## மக்களை

குண்டு வீச்சு விமானங்கள் இரண்டும் கண்ணுக்கெட்டாத உயரத்திற்குச் சென்றது. பின்னர் வந்த வேகத்திலேயே பறந்து மேற்படி வான் பரப்பில் இருந்து மறைந்துகொண்டது.

விமானங்கள் வட்டமிட்ட சமயம் மைதானத்தில் மரியாதை அணிவகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனினும் விமானங்களின் அச்சுறுத்தல் இவற்றை சிறிதளவும் பாதிக்கவில்லை. பொது மக்கள் சிலர் கிலி கொண்டு ஓட்டம் எடுத்தனர். ஓடியவர்கள் விமானங்கள் பறந்துமறைந்ததும் மீண்டும் வந்து சேர்ந்தனர்.

புலிகளின் தாக்குதலால் வந்த வேகத்தில் குண்டு வீச்சு விமானங்கள் சென்றுவிட்டதால் சிறுது நேரம் கிலிகொண்டிருந்த மக்கள் புதிய நம்பிக்கை பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். ஒருவித வெற்றி உணர்வுகலந்தமகிழ்ச்சி அனைவரது முகங்களிலும் காணப்பட்டது. இதனால்

---

## ஜப்பான் குழு பொருள்களை வாங்கவில்லை

சிறிலங்காவின் 'எக்ஸ்போ 92' முதலாவது வர்த்தகக் கண்காட்சியைப் பார்வையிட வந்த 270 பேர் அடங்கிய ஜப்பானைச் சேர்ந்த குழு பொருள்களைப் பற்றி விசாரணை செய்ததே ஒழியக் கொள்வனவு செய்வதில் அக்கறை காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

## தமிழீழ

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பிரமுகர் திரு.பாலகுமாரன் நேற்றைய தினம் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெற்ற மாவீரர் எழுச்சி நாள் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது மக்களைக் கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றும் போது எதிர் வரும் காலகட்டம் தமிழர் வாழ்வில் மாறுதல்களை உருவாக்கக் கூடியது. தமிழீழ தேசியப் போராட்டத்தில் இணைந்து உலகிற்கு எடுத்துக் காட்ட இச் சந்தர்ப்பத்தை தளமாக பயன்படுத்துங்கள் என்றார். (17)

---

## மிகக்குறுகிய

துறை பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்கள் நேற்று யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வியட்னாமிய போராட்டம் நீண்டகாலம் நடைபெற்றது. இதற்கு பல உலகநாடுகள் உதவிபுரிந்தன இதேபோல் கியூபாவிற்கு ரஷ்யாவும் பாலஸ்தீனத்திற்கு பலவல்லரசுகளும் உதவி புரிந்தன இவ்வளவு பெருந்தொகை உதவிகள் இருந்தும் இவ் விடுதலை இயக்கங்களால் ஓர் அங்குல நிலத்தைக் கூட தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க

ஆதலால்
இவள் அழிந்தவளல்ல
மானுடப் பிறப்பின்
மகத்துவம் மிக்கவளாய்
வரலாற்று ஏட்டில்
என்றும்
வாழுவாள்.

குறிப்பு: இன்று எமது இல்லத்தில் நடைபெறும் கிரிகையிலும், மதியபோசன வைபவத்திலும் உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்போடு வேண்டிக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

''சசி இல்லம்'',
கரவெட்டி தெற்கு. கரவெட்டி.

(3721)

# ஓராண்டு நினைவு நாள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 | 10 |
| — | — |
| 02 | 12 |
| — | — |
| 1961 | 1991 |

## சுப்பையா ஆனந்தநடராஜா
(A. K. R. மில் உரிமையாளர் ஊரெழு)

## திதி: 28.11.1992

மணமாலை சூடி மாதங்கள் மூன்றாகு முன்பே
பலர் ரதம் ஏறி மாயவன் அடி சேர்ந்தவரே!
சூல் கொண்டு வளர்ந்த மகளும் இங்கே
வேல் விழி கொண்டு தேடுகிறாள் அப்பாவை
அணைத்து மகிழ்ந்திட அன்னை தானிருந்தும்
இணைந்து வாழ்ந்திட ஏங்குகிறாள் தந்தைஅன்புக்காய்
மாவீரர் வரிசையிலே மைத்துனர் கிருபானந்த
- ராஜாவும்
மாண்புடன் வந்திங்கேகதைகள் பல சொன்னாரன்றோ
ஆனையிறவில் வரலாறு சமைத்த மைத்துனர்
கானசனைக் கண்டு நம் சோகந்தனைக் கூறினீரோ?
ஆண்டொன்று ஆனதையா ஆறவில்லை நம் சோகம்
கண்ணீரால் அஞ்சலித்து ஆறுதலடைகிறோம்
- எந் நாளும்
உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகள்

(சி/5499)

(கொழும்பு)

இந்த ஆண்டு இறுதிக்குள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் வடக்கு. கிழக்கு பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு. காணப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வறக்காப்பொல பகுதியில் ஆடை தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றைத் திறந்து வைத்த பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் தொடர்ந்து கூறுகையில், வடக்கு. கிழக்குப் பிரச்சினை இப்போது ஒரு குழுவையோ அல்லது ஒரு பிராந்தியத்தையோ அல்லது ஒரு சமூகத்தையோ. பாதிக்கின்ற பிரச்சினையாகஇல்லை. நாடு முழுவதன் சுதந்திரம், ஐக்கியம், ஒருமைப்பாடு என்பவற்றை பாதிக்கும் பிரச்சினையாகியுள்ளது. பாராளு

- பிரேமதாசா

மன்றத் தெரிவுக் குழுவிலிருந்து தீர்வுகளைப் பெறுவது சாத்தியமாகும் பட்சத்தில் அதற்குரிய கௌரவம் பங்கு பற்றும் அனைத்துக் கட்சிகளுக்கும் உரியதாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

### வன்னியில்

றன. அத்துடன் வவுனியா கோட்டத்திலும் பன்றிக்கெய்த குளம், புளியங்குளம், கொந்தக்காரன் குளம் மாணவர்களின் அணிநடையும் மலர் அஞ்சலியும் இடம்பெற்றன. இந் நிகழ்வுகளில் பெருந்தொகையான மாணவர்கள், ஆசிரியர்கள் பொதுமக்கள், கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### வீதிகளுக்கு பெயர் சூட்டல்

வன்னியில் வவுனியா கோட்டத்திலும் கிளிநொச்சிக் கோட்டத்திலும் உள்ள வட்டங்களில் வீதிகள் புனரமைக்கப்பட்டு அவற்றுக்கு மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன.

### பாடசாலைகளில் மாவீரர் விழா

வன்னிப்பகுதி பாடசாலைகளில்அவ்வப்பாடசாலைகளில் கல்விபயின்ற மாவீரர்களை கௌரவிக்கும் வகையிலும் அனைத்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் நிகழ்வுகள் இடம் பெற்றன. இந் நிகழ்வுகளில் பெருமளவு மாணவர்கள் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர்.

### அடுத்து

முகப்படுத்துமாறும், பொதுத் தேர்தலை எதிர்நோக்க எந்த நேரமும் தயாராக இருக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளது.

தேர்தல் முன்னேற்பாடான நடவடிக்கைகளை ஆராயும் நோக்கில் டிசம்பர் மாத நடுப்பகுதியில் 'சிறிகோத்தா'வில் அமைச்சர்கள் மற்றும் அமைப்பாளர் மாநாடொன்றை நடத்தவும் ஆளும்கட்சி தீர்மானித்து உள்ளது.

மேலும் தேர்தல் கூட்டங்கள் ஒழுங்கு செய்தல், மக்கள் மத்தியில் கட்சிக் கொள்கையை விரிவுபடுத்தல், புதிய அங்கத்தவர்கள் சேர்த்தல், தேர்தல்அபேட்சகர்கள் தெரிவு போன்ற ஆலோசனைகளும் இக்கூட்டத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது

### மாவீரர்களை

இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் இடம் பெற்ற மாவீரர் தின கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழகல்விப் பொறுப்பாளர் திரு இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வீரச்சாவை அணைக்கும் வீரர்களைப் புதைக்கும் இடத்தில் அவ்வுடல்களுக்கு மேலாக கற்குலைகள் இட்டு பறைக்கும் வழக்கம் இருந்து வந்தது அந்தமுறை, கற்பதுக்கை முறை கற்றிட்டைமுறை என சங்கப் பாடல்களான புறப்பாட்டும் அகநானூறும் எடுத்துக் கூறுகின்றன என்றார்.

### நோட்டம்

4 மணியளவில் வட்டமிட்டு நோட்டமிட்டன இரு தடவைகள் நோட்டமிட்ட பின்னர் இன்பருட்டி பகுதியையும் நோட்டமிட்டுவிட்டு பலாலி நோக்கிச் சென்றது.

அடுத்து இப்பகுதியை உலங்குவானூர்தி ஒன்றும் நோட்டமிடடது. [யோ]

வளைவுகளிலும் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த உருவப்படங்கள் உட்பட மாவீரர் நாள் அலங்காரங்களை ஆயிரக்கணக்கில் மக்கள் சென்று பார்வையிட்டவண்ணமிருந்தனர்.

இவற்றை விட குடாநாட்டின் ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் எழுச்சியின் உச்சக் கட்டத்தை அவதானிக்க முடிந்தது. திருநெல்வேலியில் உள்ள போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தினர் அலங்கரிக்கப்பட்ட நினைவுப் பந்தலில் மாவீரர்களது உருவப் படங்களை வைத்திருந்தனர். இங்கு நூற்றுக் கணக்கான மக்கள் சென்று அஞ்சலி செலுத்துவதைக் காணக் கூடியதாக இருந்தது.

பல்கலைக்கழக மைதானத்தில் இருந்தும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் மாவீரர்களது நினைவாக பிரமாண்டமான புகைக் குண்டுகள் வானத்தை நோக்கிப் பறக்கவிடப்பட்டது.

இதேவேளை நேற்று இரவும் மாவீரர் தின நிகழ்ச்சிகள் நடைபெற்ற பல இடங்களில் பெருமளவில் மக்கள் கலந்து கொண்டு மாவீரரை நினைவு கூர்ந்தனர்.

### கொழும்பில்

கைது செய்யப்பட்டனர்.

அரியாலைப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட நோர்வே பிரஜையான மகேந்திரன் கனகரட்ணமும் அவரது மாமனாரான இளைப்பாறிய அரச ஊழியரான நல்லையா என்பவருமே கைதானவர்களாவர்.

பின்னர் இவர்கள் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

### புலிகளின்

பொலிஸ் நிலைய உதவிப் பொறுப்பதிகாரியுடன் 12பேர் கொண்ட குழுவொன்று ரோந்து சென்றுகொண்டிருந்ததாகவும் இத தாக்குதலால் அவர்களில் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவிப் பொறுப்பதிகாரி லலித் சந்தனசிறி என்பவரே இத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

டிருந்த மக்கள் புதிய நம்பிக்கை பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். ஒருவித வெற்றி உணர்வுகலந்தமகிழ்ச்சி அனைவரது முகங்களிலும் காணப்பட்டது. இதனால் கைதட்டி கரகோஷம் செய்தனர். [க]

பாலஸ்தீனத்திற்கு பலவல்லரசுகளும் உதவி புரிந்தன இவ்வளவு பெருந்தொகை உதவிகள் இருந்தும் இவ் விடுதலை இயக்கங்களால் ஓர் அங்குல நிலத்தைக் கூட தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியவில்லை என்றார்.

# பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருடம் கார்த்திகை மாதம் 14-ம் திகதி (29-11-1992) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி முதல் 12-00 மணிவரையுமுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் புதல்வி திருவளர் செல்வி

## ★ சுகிர்தா ★

அவர்களுக்கு பூப்புனித நீராட்டுவிழா எமது இல்லத்தில் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயிததிருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனித்தனி நேரடியாகத் தங்களைச் சந்திக்க முடியாத சூழ்நிலைக்காகப் பொறுத்தருளுமாறு வேண்டுகின்றோம்

தங்கள் நல்வரவை விரும்பும்,

வே. சு. கருணாகரனும் குடும்பத்தினரும்,
(புங்குடுதீவு - 10)

இல. 68, நந்தாவில் அம்மன்வீதி,
கொக்குவில் கிழக்கு,
(இராமகிருஷ்ண பாடசாலைக்கு அருகாமை)

(சி-5498)

# நன்றி நவிலல்

## கப்டன் மலரவன்

[லியோ-புயல்பறவை]

[முன்னாள் யாழ். மாவட்ட விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர்]

இவர் 24-11-1992 அன்று வீரமரணம் அடைந்த செய்தி கேட்ட நேரம்தொடக்கம் 26-11-1992 அன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும் வரை மாவீரனுக்கு வீரவணக்கம் செலுத்தி மலர்மாலைகள், மலர்வளையங்கள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றை வெளியிட்ட சகபோராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் இன்னும் எங்களில் ஒருவராய் இருந்து துன்பத்தில் பங்கு கொண்டு சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எங்கள் உளம்சார்ந்தநன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புடன்
குடும்பத்தினர்

(3722)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.